



தமிழக முதல்வர்

# கலைஞர் அவர்களின்

# சுதந்திரத் திருநாள் உரை

**15-8-1999 அன்று**

**சென்னை புனித ஜார்ஜ் கோட்டைக் கொத்தளத்தில்**

**தேசியக் கொடியை ஏற்றிவைத்து**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்**

# கலைஞர் மு. கருணாநிதி அவர்கள்

**ஆற்றிய உரை**

*வெளியீடு :*

இயக்குநர், செய்தி—மக்கள் தொடர்புத்துறை.

பேரன்பு கொண்ட பெரியோர்களே !

அருமைத் தாய்மார்களே !

என் உயிரினுமேலான உடன்பிறப்புக்களே !

ஆண்டு தோறும் சுதந்திர தின விழா கொண்டாடுகிறோம் – ஆண்டு தோறும் தேர்தல் திருவிழா கொண்டாடுகிற நிலைமைக்கும் ஆட்படுத்தப்பட்டுள்ளோம்.

அரும்பாடுபட்டு பெற்ற சுதந்திரம் – ஆயிரக்கணக்கானோர் சிறையில் வாடி – அடக்குமுறைகளை ஏற்று – கண்ணீர் கொட்டி – செந்நீர் சிந்தி – அந்நிய ஆதிக்கத்தை விரட்டி அடித்து இந்த மண்ணின் மைந்தர்கள் பெற்ற விடுதலை!

இதனைப் பேணிக் காத்திடவும் – பெருமைமிகு நாடாக அகிலத்தில் உயர்த்திடவும் – ஓர் அங்குல நிலத்திலும் பகைவர் பாதம் பதிந்திடாது தடுத்து நிறுத்திக் காத்திடவும் – வலிவூட்டவும், பொலிவு சேர்க்கவும் தோள் தட்டிச் சூளுரைக்கும் நாள் தான் இந்நாள்.

இந்த ஆண்டு இந்நாளில் நாம் கார்கில் களம் கண்டு – களத்தில் வெற்றி கண்டு; மேலும் பகை, புகை போல் நுழையவும் இடம் தராமல் அணி வகுத்து நிற்கின்றோம். இப்பெரும் பணியில் தம் உயிர் மூச்சை இமயப் பனித் தொடரில் காணிக்கையாக்கிய இந்திய நாட்டுத் தீரர்குலத் தியாகத் திருவிளக்குகளுக்கு

நம் வீர வணக்கத்தைக் கண் கலங்கக் காணிக்கை யாக்குவோம்.

குறிப்பாகத் தமிழகத்திலிருந்து செருமுனை சென்று தாயகம் காத்திட இன்னுயிர் ஈந்த வீரப் பெருமக்களாம்

1. திருச்சி, பீமநகர் மேஜர் எம்.சரவணன்,
2. தஞ்சை, நாயக் ஆர்.காமராஜ்,
3. திருவண்ணாமலை, காட்டுக்காநல்லூர் சாப்பர் ஜெயவேலு,
4. பூசிமலைக்குப்பம் கன்னர் பழனி,
5. தாம்பரம் லெப்டினெண்ட் கர்னல் ராகவன்,
6. தேனி கரியனம்பட்டி செந்தில்,
7. திருச்சி பாஸ்கர்,

8. காவேரிப்பட்டினம் அவில்தார் சபியுல்லா,

9. நீலகிரி குன்னூர் அப்துல் சத்தார்,

10. சிவகங்கை கோட்டூர் முகிலன்,

11. கன்னியாகுமரி பைங்குளம் பிரசாத்

ஆகியோரைத் தலைதாழ்த்தித் தொழுதிடுவோம் – தமிழகத்துப் புதிய புறநானூற்று மறவர்கள் அவர்கள் !

அவர் போன்றோர்; நாமிருக்கிறோம், நாடு இருக்கிறது நம் குடும்பத்தைக் காப்பாற்ற எனும் நம்பிக்கையில் விட்டுச் சென்றுள்ள அவர்தம் வழித்தோன்றல்களை வாழ வைக்கும் பொறுப்பினை மத்திய அரசும் மாநில அரசுகளும் ஏற்றுள்ளன.

வீரமரணம் எய்திய 11 தீரர்கள் குடும்பங்கள் ஒவ்வொன்றிற்கும் 5 இலட்சம் ரூபாய் நிவாரண நிதியாக வழங்கப்பட்டுள்ளது.

இவர்களின் நேரடி வாரிசுகளில் ஒருவருக்கு 7 இலட்சம் ரூபாய் முதல் 11 இலட்சம் ரூபாய் வரை மதிப்புடைய உயர் வருவாய்ப் பிரிவு அடுக்குமாடிக் குடியிருப்பு ஒன்று, அவர்கள் விரும்பும் இடத்தில் வழங்கப்படவும்,

இவர்களின் வாரிசுகளில் ஒருவருக்குக் கருணை அடிப்படையில் அரசுப்பணி அளிக்கப்படவும்,

இவர்களின் குழந்தைகளுக்குக் கல்வி நிறுவனங்களில் பட்டப்படிப்பு வரை இலவசக் கல்வி வழங்கப்படவும் ஆணையிடப்பட்டுள்ளது.

இக்குழந்தைகள், எதிர்காலத்தில் உரிய வயதில் கலைக்கல்லூரிகள், மருத்துவக் கல்லூரிகள், பொறியியல் கல்லூரிகள் ஆகியவற்றில் சேர்ந்து பயில இட ஒதுக்கீடுகள் செய்து ஆணையிடப் பட்டுள்ளன.

மேலும், கார்கில் போராட்டத்தில் வீரமரணம் எய்தியோர் – காயமடைந்த வீரர்கள் ஆகியோரின் குடும்ப நிலைமைகளை நேரில் சென்று விசாரித்து, அவர்களுக்கு வேண்டிய உதவிகளை மத்திய, மாநில அரசுகளிடமிருந்து உடனடியாகப்

பெற்று வழங்கிடவும், அக்குடும்பங்களுக்கு மேலும் தேவைப்படும் உதவிகள் குறித்து அவ்வப்போது அரசுக்கு அறிக்கைகள் வழங்கி ஆவன செய்திடவும், முன்னாள் படைவீரர் நல இயக்ககத்தின் சிறப்பு அலுவலராக ஒருவர் தமிழக அரசினால் நியமிக்கப்பட்டு உள்ளார்.

இந்தப் புனித காரியத்துக்காகத் திரட்டப்படும் கார்கில் போர்வீரர் குடும்ப நிவாரண நிதிக்கென பெருந் தொகை குவிந்துள்ளது.

அதிலும் குறிப்பாக அனைத்து இந்தியாவில் கார்கில் போர் வீரர் நிவாரண நிதி திரட்டுவதில்

நமது தமிழகம் முன் நிற்கிறது – முன்னோடியாகவும் நிற்கிறது.

கடந்த ஜூன் மாத இறுதியில் தமிழக அரசின் சார்பில் விடுத்த வேண்டுகோளை யேற்று தமிழ்நாட்டு மக்கள் வலுவில் வந்து வரிசையில் நின்று வாரி வாரி வழங்கியுள்ள நிதி இன்றுடன் ஐம்பது கோடி ரூபாயை தாண்டியுள்ளது என்பதைப் பெருமிதத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். அதாவது **52** நாட்களில் **50** கோடியே **43** இலட்ச ரூபாய்.

இந்த எழுச்சி, தமிழ் மக்களின் தணியாத நாட்டுப் பற்றினைக் காட்டும் அடையாளமாகும்.

கார்கில் போர் நிதிக்காக திரட்டப்படும் தொகையில் இதுவரையில் 15 கோடி ரூபாயை தமிழ் மக்கள் சார்பாக பிரதமர் வாஜ்பய் அவர்களிடம் வழங்கியுள்ளேன்.

மேலும் இந்நிதியிலிருந்து 25 கோடி ரூபாய் நாளையதினம் டெல்லியில் பிரதமர் அவர்களிடம் வழங்க இருக்கிறேன்.

சுதந்திரத்தின் பயனாகப் பல சாதனைகளை நாடு கண்டிருக்கிறது – மேலும் பல சாதனைகளைக் காண வேண்டியுள்ளது.

இந்தக் கோட்டை கொத்தளத்தில் தேசியக் கொடியை ஏற்றுகிற சுதந்திரத்தைக் கூட மாநில

முதலமைச்சர்களுக்கு பெற்றுத் தந்தது நாம்தான் என்பதை யாரும் மறந்து விட முடியாது!

சுதந்திர நாள் தான் இது – சுதந்திர நாடு தான் இது; என்ற போதிலும் – அரசின் சார்பில் நிறைவேற்றப்பட்ட திட்டங்களையும் சாதனை களையும் இன்று விளக்குவதற்கோ, அல்லது புதிய திட்டங்களை அறிவிப்பதற்கோ சுதந்திர நாளில் எமக்கு சுதந்திரமில்லை.

காரணம் தேர்தல் கமிஷனின் கட்டளை அப்படி – அடிக்கடி தேர்தல் வருவதால் ஏற்படும் கஷ்டங்கள் இப்படி !

அறிவித்த திட்டங்களை தொடங்கிடவும் – தொடங்கியுள்ள திட்டங்களை நிறைவேற்றி

முடித்திடவும் – மத்தியில் நிலையான ஆட்சி அமைந்திட வேண்டும். மாநிலத்தில் நிம்மதியான ஆட்சி தொடர்ந்திட வேண்டும்.

அதற்காக இந்தச் சுதந்திர நாளில் சபதமேற்று – அதனைச் செய்து முடிப்போம்.

வெல்க இந்தியத் திருநாடு.

வாழ்க தமிழகம்.

வணக்கம்.

தமிழரசு அச்சகம், சென்னை—600 002.